சுருக்கம்

கட்டுமானத் தொழிலாளர் நல வாரியம் – மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண்.110–ன் கீழ் வெளியிடப்பட்ட அறிக்கை – அனைவருக்கும் கல்வித் திட்டத்தின் கீழ் கட்டுமானத் தொழிலாளர்கள் குழந்தைகள் கல்வி பெற ஏதுவாக உரிய வாகன வசதி ஏற்படுத்தித் தருதல் – அனுமதி அளித்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (ஜ2) துறை

அரசணை (நிலை) எண்.152

நாள்.8.12.2014
ஜய கார்த்திகை 22,
திருவள்ளுவர் ஆண்டு 2045
படிக்கப்பட்டது:-

தொழிலாளர் ஆணையர் கடிதம் எண். W1/36149/14, நாள்:22.08.14

ஆணை:-

2014–2015ஆம் ஆண்டின் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை வரவு செலவு கூட்டத் தொடரில் 12.08.2014 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண்.110–ன் கீழ் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இதர அறிவிப்புகளுடன் கீழ்க்கண்ட அறிக்கை வெளியிட்டுள்ளார்கள்:–

> "தற்போது கட்டுமானத் தொழிலில் ஈடுபட்டுவரும் தொழிலாளர்களின் குழந்தைகள் அனைவருக்கும் அவர்கள் பணிபுரியும் இடங்களில் கல்வி வசதி அளிக்க இயலாத நிலை உள்ளது. பெரும்பாலான கட்டுமானப் பணிகள் நடைபெறும் இடங்களில் அவர்களின் குழந்தைகள் குறைந்த எண்ணிக்கையில் உள்ளது தான் இதற்குக் காரணம். எனவே, அனைவருக்கும் கல்வி திட்டத்தின் கீழ் செயல்படும் மையங்களில் கட்டுமானத் தொழிலாளர்களின் குழந்தைகள் கல்வி பெற ஏதுவாக, உரிய வாகன வசதிகள் ஏற்படுத்தித் தரப்படும்".

2. மேற்கண்ட அறிவிப்பிற்கிணங்க, மேலே படிக்கப்பட்ட கடிதத்தில், தொழிலாளர் ஆணையர் அனைவருக்கும் கல்வித் திட்டத்தின் கீழ் கட்டுமானத் தொழிலாளர்கள் குழந்தைகள் கல்வி பெற ஏதுவாக உரிய வாகன வசதி ஏற்படுத்தித் தருவது தொடர்பான தனது கருத்துருவினை அரசுக்கு அனுப்பியிருந்தார்.

3. கவனமான பரிசீலனைக்குப் பின்னர் அரசு, கட்டுமானத் தொழிலாளர்களின் குழந்தைகளை அனைவருக்கும் கல்வித் திட்டத்தின் கீழ் செயல்படும் சிறப்பு பயிற்சி மையங்களுக்கு அழைத்துவரவும், பின்னர் பெற்றோர்கள் பணியில் ஈடுபட்டுள்ள இடங்களில் அல்லது தங்குமிடங்களில் சேர்க்கவும் தேவையான வாகனங்களை வாடகை அடிப்படையில் அமர்த்திக் கொள்ள பள்ளிக்கல்வித்துறையின் கீழ் செயல்படும் அனைவருக்கும் கல்வித் திட்டத்தின் கீழ் மேற்கொள்ள அனுமதி அளித்து அரசு

ஆணையிடுகிறது. இச்செலவினம் தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும்.

4. இத்திட்டம் பள்ளிக் கல்வித் துறையின் கீழ் செயல்படும் அனைவருக்கும் கல்வித் திட்ட இயக்குநரால் செயல்படுத்தப்படும். இந்திய அரசின் மனித வள மேம்பாட்டுத் துறையால் வெளியிடப்பட்டுள்ள அனைவருக்கும் கல்வித் திட்டத்தை செயல்படுத்துவதற்கான வழிகாட்டுதல் படி (Sarva Shiksha Abhiyan - Framework for implementation – issued by Ministry of Human Resource Development) வாகன வசதிக்காக ஒரு குழந்தைக்கு ஒரு வருடத்திற்கு (பத்து மாதங்கள்) ஆகும் செலவு ரூ.3,000/– ஆகும். அனைவருக்கும் கல்வி திட்டத்தின் கீழ் அவ்வப்போது வெளியிடப்படும் வரையறைகள் இத்திட்டத்திற்கும் பொருந்தும்.

5. இச்செலவினம் தொடர்பான பட்டியல்களை செயலாளர், தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரியம் அவர்களுக்கு அனுப்பி உரிய தொகையினை பெற்றுக் கொள்ளுமாறு மாநிலத் திட்ட இயக்குநர் அனைவருக்கும் கல்வி திட்ட இயக்கம் அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

6. இத்திட்டத்தின் செயல்பாட்டு நிலை தொடர்பான மாதாந்திர அறிக்கையை அரசுக்கு அனுப்பும்படி தொழிலாளர் ஆணையர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

மா.வீரசண்முக மணி,
அரசு செயலாளர்.

**பெறுநர்**

தொழிலாளர் ஆணையர், சென்னை–600 006.
செயலாளர், தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம்,
சென்னை–600 034.
பள்ளிக் கல்வித் துறை இயக்குநர், சென்னை–600 006.
மாநிலத் திட்ட இயக்குநர், அனைவருக்கும் கல்வி திட்ட இயக்கம், சென்னை–600 006.
மாநிலக் கணக்காயர், சென்னை–600 018.
மாநிலக் கணக்காயர், சென்னை–600 009.

**நகல்**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் செயலாளர், சென்னை–600 009.
மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–600 009.
நிதித்துறை, சென்னை – 600 009.
பள்ளிக் கல்வித்துறை சென்னை – 600 009.
தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை செயலாளரின் நேர்முக உதவியாளர்,
சென்னை–600 009.
அனைத்து மாவட்ட ஆட்சியர்.
இருப்பு கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

இரா. கஸ்தூரி
பிரிவு அலுவலர்.
08.12.14